DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 14/2023**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கவிதா | Caste: | |
| Husband Name:<br>Father's Name | குருநாதன்<br>கருப்பையா | Calling: | விவசாயம் |
| Village: | மாரந்தை | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 39 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.12.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் உடன் பிறந்த தம்பி. சாட்சிகள் சிவனாண்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் ஆகியோர்களை தெரியும். உள்ளூர்காரர்கள். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊர் பக்கத்து தெருவை சேர்ந்தவர். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர். கடந்த 16.12.2022ம் தேதி என் தம்பி உரமூட்டை வாங்கிக்கொண்டு எங்கள் ஊரில் உள்ள சிவனாண்டி புரோட்டா கடையில் மாலை 6.30 மணியளவில் நின்று கொண்டிருந்துள்ளான். அப்போது சிவனாண்டி புரோட்டா கடைக்கு எதிரே வசிக்கும் எதிரி என் வீட்டு முன்பு எப்படிடா பைக்கை நிறுத்தலாம் பள்ளப்பயலே என்று சொல்லி தள்ளிவிட்டு என் தம்பியை அடித்துவிட்டதாக என் தம்பி அழுதுகொண்டு என் வீட்டிற்கு வந்து சொன்னான். நானும் என் உடன்பிறந்தவர்களான பிச்சைப்பாண்டி,

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 17:47:31 +0530

கனகவள்ளி ஆகிய மூவரும் எதிரியிடம் சென்று ஏன் என் தம்பியை அடித்தீர்கள் என கேட்டோம். அதற்கு எதிரி நான் அப்படித்தான் அடிப்பேன் ஏன் உன் தம்பி என் வீட்டு முன்பு பைக்கை நிறுத்தினான் என்று எங்களையும் பேசினார். அதன்பிறகு நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என் தம்பி கர்ணன் புகார் கொடுத்தான். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 17:47:36 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 14/2023**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பிச்சைப்பாண்டி | Caste: | |
| Father's Name | கருப்பையா | Calling: | டிரைவர் |
| Village: | மாரந்தை | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.12.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கர்ணன் என் உடன் பிறந்த அண்ணன். சாட்சிகள் சிவனாண்டி, முத்துப்பாண்டி, சக்திவேல் ஆகியோர்களை தெரியும். உள்ளூர்காரர்கள். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊர் பக்கத்து தெருவை சேர்ந்தவர். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரி சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சேர்ந்தவர். அ.சா.5 கவிதா என் அக்கா. கடந்த 16.12.2022ம் தேதி மாலை 6.00மணியளவில் நான், என் அண்ணன் மனைவி தேவி வீட்டில் இருந்தோம். என் அண்ணன் உரமூட்டை வாங்கிக்கொண்டு எங்கள் ஊரில் உள்ள சிவனாண்டி புரோட்டா கடையில் மாலை 6.30மணியளவில் நின்று கொண்டிருந்துள்ளார். அப்போது சிவனாண்டி புரோட்டா கடைக்கு எதிரே வசிக்கும் எதிரி என் வீட்டு முன்பு எப்படிடா பைக்கை நிறுத்தலாம்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 17:47:41 +0530

பள்ளப்பயலே என்று சொல்லி தள்ளிவிட்டு என் அண்ணனை வித்தியாசமாக பேசியுள்ளார். என் அண்ணன் அழுதுகொண்டு என் வீட்டிற்கு வந்து நடந்த விவரத்தை சொன்னான். நானும் என் உடன்பிறந்தவர்களான என் அக்கா கவிதா, அண்ணன் கர்ணன், அண்ணி தேவி, மற்றொரு அக்கா கனகவள்ளி ஆகியோர் எதிரியிடம் சென்று ஏன் என் அண்ணனை தள்ளிவிட்டீர்கள் என கேட்டோம். அதற்கு எதிரி மற்றும் எதிரியின் மனைவி மற்றும் மகன் திருமுருகன் நாங்கள் அப்படித்தாண்டா அடிப்போம் ஏன் உன் அண்ணன் எங்கள் வீட்டு முன்பு பைக்கை நிறுத்தினான் என்று எங்களையும் என்னடா பள்ளப்பயல்களா, என்னடா செய்வீர்கள் என்று பேசினார்கள். அதன்பிறகு நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என் அண்ணன் கர்ணன் புகார் கொடுத்தான். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.29 17:47:46 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)